# சையது தாஜுதீனின் இதிகாச ஓவியக் கண்காட்சி



ஓவியர் சையது தாஜுதீன் வரைந்த ஆனந்த நடனம் ஆடினார்' என்ற பாடலின் தத்துவத்தைச் சித்தரிக்கும் வண்ண நூதன ஓவியம்.

உன்னதமான தெய்விகக் கலைகளுள், உணர்ச்சி வெள்ளத்துக்கு உயிரூட்டம் கொடுத்து உருவாக்கப்படுவதே ஓவியக்கலையாகும்.

வண்ணக் குழம்புகளால் வாழவைக்கும் சித்திரங்களை ஓவியமாகத் தீட்டும் திறன் ஆயிரத்திலே ஓரிருவருக்குத்தான் அமைகிறது.

அந்த ஆயிரத்திலே ஒருவராக, நமது மலேசிய நாட்டில் தமிழர்தம் கலாச்சாரங்களை ஓவியங்களாகப் படைக்கும் ஆவல் மிக்கவராக விளங்குபவர்தான் ஜனாப் ...சயது தாஜுதீன் ஆவார். 32 வயது நிரம்பிய ...ந்த இளைஞர், ...ளமையிலேயே இந்நாடு ...து கற்று, இந்தியா ...ன்று ஓவியக்கலையை கசடறத் தெளிந்து ...ந்து உயரிய விருது...ம் சான்றிதழ்களும் ...ற்று வந்து, தற்போது ...நகர் மாரா கலைக் ...லூரியில் பணி புரிகிறார்.

...டர்ன் ஆர்ட்' என்ற நூதன ஓவியக்கலையில் அவர் கொண்டுள்ள ஆர்வமும், ஈடுபாடும் அவர் தீட்டியுள்ள ஓவியங்களிலே பூர்ணமாகப் பளிச்சிடுகின்றன.

மேலும், இதிலேயுள்ள தனிச் சிறப்பு என்னவென்றால் அவரது எண்ணமும் பயிற்சியும் இந்து சமயச் சார்புடைய ஓவியங்களை மிகுதியாகப் படைப்பதிலே அவரை ஈடுபடுத்தியிருப்பது தான். இனம், மதம், மொழி அனைத்துக்கும் அப்பாற்பட்டது தான் கலை என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

பொன்மானை இராமர் துரத்துவதிலிருந்து தொடர்ந்து அசோக வனத்தை அனுமார் தீக்கிரையாக்குவது வரை இராமாயணக் காட்சிகளை மிக அருமையாகத் தீட்டியிருக்கிறார். உயிரூட்டமுள்ள ஒன்பது தொகுப்புக்களானான அந்த இணைப்பு, இணையற்ற மாபெரும் கலைப் படைப்பு.

'ஆனந்த நடனம் ஆடினார்' என்ற பாடலுக்குரிய ஓவியமும், 'வேலும் மயிலும் துணை' என்ற கருத்தை விளக்கும் சித்திரமும், இன்னும் பல்வேறு உருவப் படைப்புக்களும் அவரது கலையார்வத்துக்கும் கைவண்ணத் தேர்ச்சிக்கும் கட்டியம் கூறிக் கருத்தை ஈர்க்கின்றன.

பினாங்கு மியூசியத்தில் அவரது ஓவியத் தொகுப்புக்களடங்கிய கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு, 19-5-75 வரை நடைபெறுகிறது.

மலேசிய நாட்டில் தமிழர்தம் கலாச்சாரத்துக்கு நிலையான நினைவுப் பொருட்களாகத் தமது படைப்புக்களை ஆக்கி வருவதாகக் கூறுகிறார் அவர். தமிழர்களும் தங்களது ஆதரவை நல்கி ஊக்குவிக்க வேண்டியது கடமையாகும்.

பிரதிபலன் கருதாமல் கலைக்காகவே பாடாற்றும் ஜனாப் சையது தாஜுதீனின் முயற்சிகள் வெற்றியும் முழுமைப் புகழும் பெற கலையன்னை துணை நிற்பாளாக!.

நேசன், ஞாயிற்றுக்கிழமை, மே. 18, 1975

# தேசியக் கலைக்கூடத்தி... பரிசு பெற்ற ஓவியரி... கைவண்ணம் காணல...

கோலாலம்பூர், ஏப். 12- கடந்த 1976ஆம் ஆண்டு தேசிய கலைக்கூடத்தில் சிறந்த ஓவியருக்கான பரிசைப்பெற்ற சையது தாஜுடினின் ஓவியங்கள் தற்சமயம் இங்குள்ள (ஜாலான அம்பாங், தேவான் துங்கு) தேசிய கலைக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

பெட்டாலிங் ஜெயாவில் உள்ள யூனிவர்சிட்டி கார்டனைச் சேர்ந்த சையது தாஜுடின் (வயது 34) தமது ஆரம்பக் கல்வியை பினாங்கில் உள்ள வெல்லஸ்லி பள்ளியிலும், மெதடிஸ் பள்ளியிலும் மேற்கொண்டார். அவர் தமது பீ யூ சி படிப்பை 1973ஆம் ஆண்டு மதுரையில் மேற்கொண்டார்.

1968ஆம் ஆண்டு முதல் 1973ஆம் ஆண்டு வரை சென்னையில் உள்ள ஓவியம் மற்றும் கைவேலை சம்பந்தப்பட்ட அரசாங்க கல்லூரியில் பயின்ற அவர் டிப்ளோமா பெற்றார்.

சென்னையில் நடைபெற்ற அரசாங்க கல்லூரி ஆண்டு கண்காட்சியிலும் சென்னையில் உள்ள உதவி தூதரின் ஏற்பாட்டில் நடைபெற்ற மலேசிய ஓவியங்கள் கண்காட்சியிலும் கோலாலம்பூரில் தேசிய கலைக்கூடத்தில் நடைபெற்ற தேசிய கண்காட்சியிலும் இன்னும் பல கண்காட்சிகளிலும் இவர் பங்குப்பெற்றார்.

1971 ஆம் ஆண்டு முதல் 1973ஆம் ஆண்டு வரை இலங்கை ... இந்தியாவில் ... பயணம் செய்... சையது தாஜுடின் ... காலத்திய ... கோவில்கள் ... அறிந்து வந்திருக்கி...

சுமார் 2½ ... களாக பல ஆய்... குப்பின் திட்ட... இவருடைய இராம... ஓவியத்தை தேசிய ... கூடம் தனது ... காட்சிக்காக ... கொண்டது.

மலாக்கா சாம்ரா... தின் பொற்கால ... திரத்தைத்தீட்டிவரு... ஓவிய பாணியில் ... வருவதாக ... தாஜுடின் கூ... இதன் முதல் ... தற்சமயம் ... கலைக்கூடத்தில் காட்... வைக்கப்பட்டிருக்கி...

சுமார் எட்டு ... களாக இந்தி... வசித்துள்ள ... முதல் முதலாக அ... ஓவியங்கள் கவர்... அவர் கூறினார்.

தமிழ் நேசன், செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 12

# கைது

சிரம்பான், ஏப்... பதினெட்டு வயதுப் ... ஒருத்தியை ... முன்தின இரவு ... லாபுவில் மான... செய்ய முயன்றதா... டாக்சி ஓட்டி ... செய்யப்பட்டுள்ளா...

இதற்கிடையே ... டிக்சன் மாவட்ட ... தார அனுமதி... வேலை பார்க்கும் ... ஒருவனை போ... கைது செய்துள்ளன...